முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை

அசல் வழக்கு எண் 207/2017

**பிரதிவாதி தரப்பு சாட்சி-1 தங்கவேல் திருமதி.ஏ.பிரேமா பெஞ்ச் கி**ளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 04.03.2025 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**<u>வாதி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

1) இறந்துபோன பழனியப்பன் பிள்ளை எனக்கு என்ன உறவு என்றால் மாமன் உறவு ஆவார். 1ம் வாதி என் சகோதரி. 1ம் வாதியைதான் பழனியப்பன்பிள்ளை திருமணம் செய்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி பழனியப்பன்பிள்ளை மற்றும் காளியம்மாளுக்கு எத்தனை வாரிசுகள் என்றால் 4 பெண்கள். எனக்கு பெயர் தெரியாது. 1ம் பிரதிவாதி என் அண்ணன். நாங்கள் 3 பேர் ஆண்மக்கள் மற்றொருவர் துரைராஜ். அவர் இறந்துவிட்டார். 3, 4 பிரதிவாதிகள் துரைராஜின் வாரிசுகள். 1ம் பிரதிவாதி ராஜலிங்கம் இறந்துவிட்டார். 1ம் பிரதிவாதியின் மனைவி பெயர் சின்னாத்தாள் (எ) அங்காள ஈஸ்வரி. மகன் செந்தில்(எ) செந்தில் குமார். மகள் செல்வி என்றால் சரிதான்.

2) வாதிகள் எங்கு வசிக்கிறார்கள் என்றால் திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் வட்டம் ஆனைப்பட்டியில் வசிக்கிறார்கள். நான் கடவூர் வட்டம் காளையார்பட்டியில் வசிக்கிறேன். தாவா சொத்து காளையாபட்டியில் உள்ளது என்றால் சரிதான். பழனியப்பபிள்ளை தாவா சொத்தை 07.03.1977 ல் லட்சுமி என்பவரிடம் இருந்து கிரையம் பெற்றார் என்றால் கிரையம் வாங்கினார். தேதி ஞாபகமில்லை. அன்றைய தேதியில் இருந்து பழனியப்பபிள்ளை தான் விவசாயம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. நாங்கள் தான் அனுபவம் செய்து வருகிறோம். எதன் அடிப்படையில் நாங்கள் விவசாயம் செய்கிறேன் என்றால் கிரையத்தொகையை நாங்கள் தான் கொடுத்தோம். தொகை பற்றாததால் ரூ.5000/- பழனியப்பபிள்ளை கொடுத்தார். கிரையம் தீர்ந்து பின்னிட்டு பாகம் பிரித்துக் கொள்ளலாம் என பழனியப்பபிள்ளை பெயரில் கிரையம் வாங்கினோம்.

3) கிரையம் வாங்கியபோது நான் சென்றிருந்தேனா என்றால் இல்லை. நான் யாரிடம் கிரையத்தொகையை கொடுத்தேன் என்றால் கிரையதாரர் லட்சுமாயிடம் கொடுத்தேன். மேற்படி நான் கிரையத்தொகையை லட்சுமாயிடம் கொடுத்த விபரம் யாருக்கு தெரியும் என்றால் சொக்கலிங்கம் பிள்ளை, உடையார் ஒருவர் அவர் பெயர் தெரியவில்லை. சொக்கலிங்கம் பிள்ளை இறந்துவிட்டார். மற்றொருவர் உயிருடன்

உள்ளார். மேற்படி உடையார் என்வரை விசாரித்தால் உண்மை தெரியும் என்றால் சரிதான். பழனியப்பபிள்ளை பெற்ற கிரைய ஆவணத்தில் நானோ, என் சகோதரர்களோ சாட்சிக் கையெழுத்தோ அல்லது வேறு ஏதேனும் கையெழுத்தோ போட்டோமா என்றால் இல்லை. மொத்த கிரையத்தொகை எவ்வளவு என்றால் ரூ.13,000 ஆகும். அதிகப்படியான கிரையத்தொகையை நாங்கள் கொடுத்திருக்கும்பொழுது எதனால் பழனியப்பிள்ளை பெயரில் கிரையம் பெற்றோம் என்றால் எங்கள் சகோதரி கணவர் என்பதால் அவர் பெயரில் வாங்கினோம்.

4) பழனியப்பபிள்ளை பெற்ற கிரையம் ஆவணம் வா.சா.ஆ-1ல் ரூ.10,000/-க்கு கிரையம் பெற்றதாக கண்டுள்ளது என்றால் எனக்கு படிக்க தெரியாது. வா.சா.ஆ-1 கிரைய ஆவணத்தை நான் பார்த்திருக்கிறேனா என்றால் இல்லை. கிரையத்தொகை ரூ.8,000/- நாங்கள் கொடுத்ததாக என் பதிலுரையில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. என் முதல் விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் கிரையத்தொகை கொடுத்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-R.தமிழரசி

**Principal District Munsif,**

**Kulithalai.**